விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 27

ஒலி 008 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 12 சனிக்கிழமை (27.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் கைது



(யாழ்ப்பாணம்)

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவா

02ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.முற்றவெளி எல்லையிடல்

## யாழ்.ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கடும் வாக்குவாதம்



(யாழ்ப்பாணம்)

மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் பதில் சொல்ல வேண்டியது உங்கள் கடமை. அதைவிடுத்து இவ்வாறு அலட்சிய

15ஆம் பக்கம் பார்க்க

### குழப்பம், கூக்குரல், நகைச்சுவை, நையாண்டி

# முடிவுகள் ஏதுமின்றி நிறைவடைந்தது

### யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

குழப்பம், கூக்குரல், நகைச்சுவை, நையாண்டி என்பன நிறைந்த அரங்காகக் காணப்பட்ட யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எந்தவித முடிவுகளும் எட்டப்படாமல் நிறைவடைந்தது.

(02ஆம் பக்கம் பார்க்க)



உள்ளே வலம்புரியின்
தெய்வீக வர்ணக் கலண்டர்
தவறாது கேட்டு வாங்கவும்

### துன்னாலை தெற்கில்

## எலிக்காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்


(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்கில் எலிக்காய்ச்சல் காரணமாக குடும்பஸ்

15ஆம் பக்கம் பார்க்க

## ஒற்றையாட்சியைத் திணிக்கமுயன்றால் மீண்டும் ஈழப் போராட்டம் வெடிக்கும்

### அன்புமணி ராமதாஸ் எச்சரிக்கை




(சென்னை)

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் மீது ஒற்றையாட்சி முறையைத் திணிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் முயற்சிக்குமானால், மீண்டுமொரு ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு அது வழி வகுக்கும் என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, தற்போதைய

15ஆம் பக்கம் பார்க்க



ஆழிப்பேரலையின் 21ஆவது நினைவேந்தல் வடக்கின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

### யாழ்.புத்தூரில்

## மோ.சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூரில் மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த அருணாசலம் சத்தியசீலன் (வயது-75) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கனகம் புளியடி வீதியில் இருந்து புத்தூர் சந்தியூடாக நேற்று

02ஆம் பக்கம் பார்க்க

## போதையுடன் கைதடியில் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## உடுவிலில் குடும்பஸ்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றிலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உடுவில் மல்வம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான ஞானசீலன் ரெஜித்டிலாஸ் (வயது-40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள்...

முன்தினம் மாலை துவிச்சக்கர வண்டியில் கோயிலுக்கு சென்று கொண்டிருந்தார். இதன்போது மெய்கண்டான் சந்திக்கு அண்மித்த பகுதியில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதி விபத்து சம்பவித்தது.

இதன்போது அந்த இடத்திலேயே அவர் மயக்கமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்ததாக தெரிவித்தனர்.

உயிரிழப்பு தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். விபத்து குறித்து விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டனர். (ம-7,104)

## முன்னாள்...

னந்தவுக்கு கடந்த 2001 ஆம் ஆண்டு இராணுவத்தால் அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, கடந்த 2019 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட குற்றவாளியான மாகந்துரே மதுஷிடம் முன்னெடுத்த விசாரணையின் போது கண்டு பிடிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைக்கு அமைய முன்னாள் அமைச்சர் மேற்படி கைது செய்யப்பட்டுள்ளார்

குறித்த குற்றவாளி 2020 ஆம் ஆண்டு பொலிஸாருடனான மோதலில் கொல்லப்பட்டிருந்தார்.

அவரின் துப்பாக்கியின் இலக்கங்களைப் பரிசோதித்த போது, அது டக்ளஸ் தேவானந்தாவிற்கு வழங்கப்பட்ட துப்பாக்கி என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், அந்தத் துப்பாக்கி எவ்வாறு காணாமல் போனது என்பது குறித்து விளக்கம் அளிக்க அவர் தவறியுள்ளார்.

இந்நிலையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## முடிவுகள்...

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த கூட்டம் ஆரம்பமான நேரம் முதல் பல தடவைகள் சபை அல்லோ கல்லோலப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதைப் பேசுபொருளாகக் கொண்டு ஆளும் - எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் முரண்பட்டுக் கொண்டேயிருந்தனர்.

முரண்பாடு மட்டுமன்றி நகைச்சுவைப் பேச்சு, நையாண்டிக் கதைகள், கூக்குரல், குழப்பம் என ஒருங்கிணைப்பு மண்டபமே பரபரப்பாக இருந்தது.

எந்தச் செயற்திட்டத்தை எடுத்தாலும் அது இழுபறி நிலையில் நின்றதுடன் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் பார்வையாளர்களாகவே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஒருகட்டத்தில் பொறுமையிழந்த பொதுமக்கள் எழுந்து "இது அரசியல் மேடையல்ல மக்கள் பணிக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்" எனப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கெஞ்சும் நிலை உருவாகியபோதும் அங்கு அமைதி நிலவாத காரணத்தால் எந்த வித முடிவும் எட்டப்படாமலேயே ஒருங்கிணைப்புக் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது. (ம-க)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 25.12.1947

மறைவு 12.12.2025

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
ஆசிரியை **திருமதி தர்சினி ஈழக்குமரன்**
அவர்களின் அன்புத்தந்தை

## நாகநாதன் தம்பிப்பிள்ளை

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!

**ஆசிரியர் கழகம்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

(C-4674)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவயோகம்மா பரமலிங்கம்
## (ஓய்வுநிலை ஆசிரியர் – யோகம் ரீச்சர்)



புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 206/3,பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம்மா பரமலிங்கம் அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சின்னையா பரமலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதமலிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் Dr.ஸ்ரீகிருஷ்ணா (என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை), ஸ்ரீராகவன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.ரஜனி (பொது வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை), சர்மிளா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீவாஷினி, ஸ்ரீவைஷ்ணவி, கிருத்திகன், திவ்வியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
Dr. ஸ்ரீகிருஸ்ணா

(C-4679)

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 09 - 1941



மறைவு 26 - 12 - 2025

## நாகரட்ணம் மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் – யாழ்/ பரியோவான் கல்லூரி,
சென். தோமஸ் கல்லூரி – கொள்ளுப்பிட்டி)

பன்னாலை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நாகரட்ணம் மயில்வாகனம் அவர்கள் நேற்று (26.12.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 95,
செட்டித்தெரு,நல்லூர்,
யாழ்ப்பாணம்.

074 354 5115,
+61 421 858 821
+61 422 027 625

தகவல் :
குடும்பத்தினர்

(6404)

# ஈ:ர் ஐந்து பத்து வருடத்தில்

## செல்வி ஆனந்தராணி அப்புத்துரை



மண் மகிழ : 27.12.1958
ஊர் நெகிழ : 17.12.2015

திதி : ஸப்தமி
ஆனந்தமாய் உதித்தவளே
ஆணித்தரமான சொல்லாடல்
ஆழமான சமூக சிந்தனையாய்
தம்பாலையே உன்மூச்சாய்
பலகாலம் சைக்கிளில் சென்று
பல்வேறு மூலை முடுக்கெல்லாம்
மக்களுக்காய் சேவை செய்தீர்!
உன்நாமம் பலரின் வாழ்வை செதுக்கியது
உனக்காக ஒரு நிமிடம் சிந்தித்திடுவோம்.

தம்பாலை,
அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்

(C-4677)

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மத்தியில் சமுர்த்தி வீதியில் (வங்கி வீதியில்) 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- தார்றோட் முகப்புடன்
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பரம்பரைக்காணி, 1951ம் ஆண்டு உறுதி, தோம்பு யாவும் உண்டு.
- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலை அமைப்பதற்கும் உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீ ஊற்று, அமைதியான சூழல்.

**ஒரு பரப்பின் விலை : பதினைந்து இலட்சம் (1500,000/=)**

தொடர்புகளுக்கு:
**077 129 4999, 076 571 0369**

(6403)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடரால் வீடுகளை இழந்தவர்கள் விரும்பும் மாவட்டங்களில் குடியேறலாம்

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

**டித்வா பேரிடரால் முழுமையாக வீடுகளையும், காணியையும் இழந்தவர்கள் தாம் விரும்பிய மாவட்டத்தில் குடியேற முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

அவ்வாறு வேறு மாவட்டங்களில் குடியேற விரும்புபவர்களுக்கும், ஒரு கோடி ரூபாய் நிதியை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் என வீடமைப்பு அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

எனினும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, காணி கொள்வனவு மற்றும், வீடமைப்பு பணிகளைக் குறித்த பயனாளர் முன்னெடுக்க வேண்டும்.

இந்த நடைமுறைகள் தொடர்பான இற்றைப்படுத்தப்படும் தரவுகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், பயனாளி தனக்கான நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தினால் 2026 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட வீடமைப்பு திட்டமும், பேரிடருக்குப் பின்னர் முன்னெடுக்கப்படத் திட்டமிடப்பட்ட வீடமைப்பு நடவடிக்கையும் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன்படி, 2026 ஆம் ஆண்டு பாதீட்டு ஒதுக்கீட்டுக்கு அமைய 16,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அதில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டங்களும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான மீள் குடியேற்ற திட்டத்திற்கான வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், பேரிடருக்குப் பின்னரான வீடமைப்புக்காக குறைநிரப்பு பிரேரணையில் 100 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பேரிடரினால் வீடுகளை இழந்தவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான தகவல்கள் உரிய முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் அபிலாசைகளுக்கு அமைய வீடமைப்பு தொடர்பான தீர்மானங்கள் இறுதிப்படுத்தப்படும் எனவும் வீடமைப்பு அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார். (நி)



# புத்துயிர் பெறும் நுவரெலியா

## படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

(நுவரெலியா)

டித்வா சூறாவளியால் நுவரெலியாவில் ஏற்பட்ட அனர்த்தங்களின் பின்னர் தற்போது சீரான காலநிலை நிலவி வருவதால் ஓரளவு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக நுவரெலியாவில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தில் சுற்றுலா பயணிகள் வருகை குறைவாக காணப்பட்டது.

நுவரெலியாவில் ஏற்பட்ட வெள்ளத்தில் பின்னர் முக்கிய சுற்றுலா பகுதியைச் சுற்றி பல புதுப்பித்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் பல்வேறு பன்முக பண்புகளை கொண்ட கிரகறி வாவியில் நாட்டில் நிலவிய மோசமான காலநிலையால் படகு சவாரி முற்றாக நிறுத்த நடவடிக்கைகள் எடுத்தனர்.

நுவரெலியாவில் தொடர்ந்து பெய்த கன மழையால் சேதம் அடைந்தன. இதை யடுத்து அந்த படகுகள் அனைத்தும் கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இதனால் படகு சவாரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்ய முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

தற்போது சீரான காலநிலை நிலவி வருவதால் பழுதடைந்த படகுகள் அனைத்தும் சீரமைக்கப்பட்டதை 20 நாட்களுக்கு பிறகு மெதுவாக படகு சவாரி மீண்டும் தொடங்கியுள்ளது.

இதனால் ஏராளமான சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்து மகிழ்ந்ததை காண முடிந்தது.

நுவரெலியாவில் வானிலை தொடர்பான சிறு சிறு போக்குவரத்து இடையூறுகள் உள்ள போதிலும் நத்தார் பண்டிகை விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறை என்பதால் நுவரெலியாவிற்கு அதிக எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

குறிப்பாக கடந்த மூன்று நாட்களாக நுவரெலியாவில் வெயில், சாரல் மழை, பனிப்பொழிவு ஆகிய காலநிலை நிலவி வருகிறது. இந்த மாறுபட்ட கால நிலை சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. (நி)

# அடுத்த வாரம் முதல் தொடர்வேலை நிறுத்தம்

## பல்கலை ஆசிரியர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அடுத்த வாரம் முதல் தொடர் வேலைநிறுத்தமொன்றை மேற்கொண்டு பல்கலைக்கழகங்களை முடக்கப்போவதாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் சார்பில் அதன் செயலாளர் சாருதத்த இளங்க சிங்க ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களின் பீடாதிபதிகள் மற்றும் துறைகளின் பிரதானிகளை நீக்கும் அதிகாரம் பல்கலைக்கழக செனட் சபைக்கு சட்டமொன்றின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதனை திருத்தம் செய்யுமாறு பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் பல்வேறு தடவைகள் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்திற்கும் பிரதமர் ஹரிணி அமரசூரிய விற்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது குறித்த சட்டத்தில் திருத்தம் செய்வதாக பிரதமர் வாக்குறுதி அளித்திருந்தார்.

எனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பிரதமரின் வாக்குறுதியை மீறும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் எனவே குறித்த விடயத்தில் உடனடி தீர்வொன்றை வலியுறுத்துவதாகவும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறின்றேல் அடுத்த வாரம் முதல் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களையும் முடக்கும் வகையில் தொடர் வேலை நிறுத்தமொன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் சாருதத்த இளங்கசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி)

# வியட்நாம் தூதுவர்-அமைச்சர் நளிந்த சந்திப்பு



(கொழும்பு)

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ மற்றும் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ட்ரின் திடாம் ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சில் நடைபெற்றது.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான தற்போதைய இராஜதந்திர உறவுகள் மற்றும் எதிர்காலத்தில் அந்த உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் வியட்நாமின் உதவியுடன் இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாட்டின் சுகாதார சேவையின் தற்போதைய செயற்பாடு, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தேவைகள், விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஆஷஸ் தொடரின்4 ஆவது போட்டி

# ஆஸியை 152 ஓட்டங்களுக்குள் சுருட்டிய இங்கிலாந்து!

மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரின் நான்காவது போட்டியின் முதல் இனிங்சில் இங்கிலாந்து அணி, அவுஸ்திரேலியாவை 152 ஓட்டங்களுக்கு சுருட்டியது.


5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியா 3:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்று, தொடரை தக்கவைத்துள்ளது. இந்த நிலையில் தொடரின் நான்காவது போட்டியானது நேற்று வெள்ளிக்கிழமை காலை மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது.

இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து மிகவும் மேம்பட்ட ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இதன் மூலம் 93,442 ரசிகர்களின் முன்னிலையில் போட்டியாளர்களை 45.2 ஓவர்களில் 152 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்தனர்.

மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக பார்வையாளர்கள் வருகை தந்த போட்டியாக இது அமைந்தது.

முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணிக்காக நேசர் 35 ஓட்டங்களையும், உஸ்மான் கவாஜா 29 ஓட்டங்களையும் மற்றும் அலெக்ஸ்கேரி 20 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர். இங்கிலாந்து சார்பில் பந்து வீச்சில் ஜோஷ் டங் 5 விக்கெட்டுகளையும், கஸ் அட்கின்சன் 2 விக்கெட்டுகளையும் மற்றும் அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினார். (3)



## தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டி

# வவுனியா வீரன் டனுசனுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்கள்

35ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் போது 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கத்தினையும், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும் வென்று வவுனியா மாவட்ட வீரரான சசிகுமார் டனுசன் சாதனை படைத்துள்ளார்.

தியகம மகிந்த ராஜபக்ச சர்வதேச விளையாட்டு மைதானத்தில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இவ் விளையாட்டு விழாவில் 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்கு நிமிடம் 2.63 செக்கனில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தினையும் 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஒரு நிமிடம் 56.90 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தினையும் பெற்று வவுனியா மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.



இவ் வருட வட மாகாண மட்ட விளையாட்டு பெருவிழாவின் போதும் 1500 மீற்றர், 800 மீற்றர் ஆகிய ஓட்டப் போட்டிகளில் பழைய சாதனையினை முறியடித்து புதிய சாதனையினை வவுனியா மாவட்ட வீரரான சசிகுமார் டனுசன் படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## 14 வயதில் உயரிய விருது

# கிரிக்கெட் உலகை அதிரவைக்கும் வைபவ் சூர்யவன்ஷி

இந்தியாவின் இளம் கிரிக்கெட் வீரரான வைபவ் சூர்யவன்ஷி, (வயது - 14) தனது அதிரடி ஆட்டத்தால் ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகின் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

இதன்படி நேற்று புதுடில்லியில் நடைபெற்ற விழாவில், அவருக்கு "பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார்" என்ற இந்தியாவின் உயரிய இளைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை புதுடில்லி சென்றடைந்த வைபவ் சூர்யவன்ஷி, நேற்று இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவிடமிருந்து இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.


சமீபத்தில் நடைபெற்ற விஜய் ஹசாரே கிண்ண கிரிக்கெட் தொடரில் அருணாச்சல பிரதேசத்திற்கு எதிரான ஆட்டத்தில், வைபவ் சூர்யவன்ஷி வெறும் 84 பந்துகளில் 190 ஓட்டங்களை விளாசி அதிரடியில் மிரட்டினார்.

உள்நாட்டு கிரிக்கெட் அரங்கில் அவர் நிகழ்த்திய இந்த அதிரடி சாதனை, அவரைத் தேசிய அளவில் அடையாளம் காட்டியது. இந்த விருது வழங்கும் விழாவில் பங்கேற்பதற்காக, அவர் தற்போது நடைபெற்று வரும் விஜய் ஹசாரே தொடரின் எஞ்சிய போட்டிகளில் விளையாடமாட்டார் என் தெரிவிக்கப்படுகின்றது. பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் இன்படி 5 முதல் 18 வயதுக் குட்பட்டவர்களுக்கு வழங்கப்படும் இந்தியாவின் உயரிய விருதாகும்.

இதன்படி வீரம், கலை மற்றும் கலாசாரம், சுற்றுச்சூழல், புத்தாக்கம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சமூக சேவை மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் விதிவிலக்கான சாதனை படைப்பவர்களுக்கு இந்த விருது ஆண்டுதோறும் வழங்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)



# ஒரே போட்டியில் அதிக பிடியெடுப்புக்கள் உலக சாதனை படைத்த இந்திய வீரர்



இந்தியாவின் கேரள அணியின் பந்து வீச்சாளரான விக்னேஷ் புதூர், 6 பிடியெடுப்புக்களை எடுத்து ஜான்டி ரோட்ஸின் உலக சாதனையை முறியடித்துள்ளார்.

இந்தியாவின் லிஸ்ட் ஏ கிரிக்கெட் தொடரான விஜய் ஹசாரே கிண்ணம் கடந்த 24 ஆம் திகதி தொடங்கி நடை பெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடை பெற்ற போட்டியில் கேரளா மற்றும் திரிபுரா அணிகள் மோதியது. நாணய சுழற்சியில் வென்ற திரிபுரா அணி, முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தது. இதன் படி, முதலில் துடுப்பாட்டம் ஆடிய கேரள அணி, 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து, 348 ஓட்டங்கள் குவித்தது.

348 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய திரிபுரா அணி, 36.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 203 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம், கேரள அணி 145 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கேரள அணியின் பந்து வீச்சாளரான விக்னேஷ் புதூர் இந்த போட்டியில் 6 பிடியெடுப்புக்களை எடுத்துள்ளார். இதன் மூலம், ஒரு போட்டியில் அதிக பிடியெடுப்புக்களை எடுத்த வீரர் என்ற உலக சாதனையை படைத்துள்ளார்.

முன்னதாக 1993 ஆம் ஆண்டில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில், தென் ஆபிரிக்க வீரர் ஜான்டி ரோட்ஸ் ஒரு போட்டியில் 5 பிடியெடுப்புக்கள் எடுத்து இந்த சாதனையை படைத்திருந்தார்.

கடந்த மே மாதம், மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில், இங்கிலாந்து வீரர் ஹாரி ப்ரூக், 5 பிடியடுப்புக்கள் எடுத்து இந்த சாதனையை சமன் செய்தார். தற்போது, விக்னேஷ் புதூர் இந்த சாதனையை முறியடித்துள்ளார். 2026 ஐ.பி.எல் தொடருக்காக, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி அவரை இந்திய ரூபாய் 30 லட்சத்திற்கு வாங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி மாவட்டச் செயலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்
# சோதனை நடவடிக்கைகள் தீவிரம்



(கண்டி)

கண்டி மாவட்டச் செயலக வளாகத்தில் வாகனமொன்றில் பொருத்தப்பட்ட குண்டு, வெடிக்கச் செய்யப்படவுள்ளதாக விடுக்கப்பட்ட மிரட்டலை அடுத்து, நேற்றுக் காலை வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர் உள்ளிட்ட பல பாதுகாப்புப் பிரிவினர் இணைந்து தீவிர தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர். மாவட்டச் செயலகத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு வந்த செய்தி ஒன்றிலே இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்ட செயலக வளாகத்தினுள் நிறுத்தப்பட்டுள்ள வாகனமொன்றில் குண்டு பொருத்தப்பட்டுள்ளதாகவும், அது வெடிக்கச் செய்யப்படவுள்ளதாகவும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து மாவட்டச் செயலாளர் உடனடியாகப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த அவசரச் சோதனை முன்னெடுக்கப்பட்டது. நேற்று காலை 10 மணியளவில் பொலிஸாரின் மோப்ப நாய்களின் உதவியுடன் இந்தச் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர் வருகை தந்ததைத் தொடர்ந்து, மாவட்ட செயலகத்தின் பிரதான நுழைவாயில் முழுமையாக மூடப்பட்டது. இதனால் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வந்திருந்த பொது மக்கள் உள்ளே செல்லவோ அல்லது வெளியேறவோ முடியாமல் பல மணிநேரம் பெரும் சிரமத்திற்குள்ளாகினர். (நி)

# நீராடியபோது விபரீதம்

(கொழும்பு)

மிரிஸ்ஸ கடலில் நீரில் மூழ்கி வைத்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெலிகம பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வெலிகம காவல் பிரிவின் மிரிஸ்ஸ பகுதியில் கடலில் நீந்திக் கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

கடலில் மூழ்கிய வைத்தியரை அப்பகுதி மக்கள் மீட்டெடுத்து, அவசர அம்புலன்ஸ் சேவை மூலம் மாத்தறை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி அங்கு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர், வெலிகம வாலன மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரியாக இருந்த 49 வயதான தேஜன் ஜெயசேகர என்ற வைத்தியர் என் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த வைத்தியர் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு அதிகாரபூர்வ பணிகளுக்காக வாலன மருத்துவமனைக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது. (நி)

# ரணிலும் சஜித்தும் இணைய வேண்டும்
# ரவி கருணாநாயக்க வலியுறுத்து

(கொழும்பு)

ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைப்பது தொடர்பில் முன்னெடுக்கப்படும் முயற்சி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "ரணில் விக்ரமசிங்க தலைமைப் பதவியில் இருந்து விலகுகின்றாரா? இல்லையா? என்பது முக்கியம் அல்ல. அவரும், சஜித்தும் இணைந்து செயற்பட வேண்டியதுதான் முக்கியம்.

ஒன்றிணைவுக்காகவே நானும் பாடுபட்டு வருகின்றேன். எனினும், அதனை நான் வெளியில் காட்டிக் கொண்டு பிரசாரம் தேடவில்லை. அதேபோல் சிறு கட்சிகளையும் இணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளேன். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்த பின்னர் ஏனைய சிறு கட்சிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான சிறப்பான ஆரம்பம் கொழும்பில் வழங்கப்பட்டுள்ளது." எனத் தெரிவித்தார். (நி)

# மின்கம்பத்தில் மோதிய கார்
# இருவர் வைத்தியசாலையில்



(கொழும்பு)

காலி-மாத்தறை பிரதான சாலையில் தலவெல்ல பகுதியில் நேற்றுக் காலை கார் ஒன்று மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த இருவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கார் மின்கம்பத்தில் மோதியதால் மின் கம்பம் சேதமடைந்தது.

உயர் மின்னழுத்த மின் கம்பிகள் பிரதான சாலையில் விழுந்ததால் கனரக வாகனப் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. (நி)

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்
## 'தக்காளிச் செய்கை' அறுவடை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன் புரிச்சங்கம், நவீன விவசாய முறையில் இரண்டாவது முறையாகவும் பயிரிடலை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது.

அலுவலக சூழலை பசுமையாக மாற்றுவது, ஊழியர்களுக்கு மனநலன் மற்றும் பணித்திறனை அதிகரிக்கும் சூழலை உருவாக்குவது என்பனவற்றை இலக்காகக் கொண்டு, ஊழியர் நலன்புரிச் சங்கம் பல்வேறு விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

ஆரம்ப முயற்சியின் வெற்றியினைத் தொடர்ந்து அதன் தொடர்ச்சியாக பச்சை வீட்டினுள் தற்பொழுது ஒரு புறம் தக்காளி செடிகளும், மற்றொரு புறம் கறி மிளகாய் செடிகளும் பயிரிடப்பட்டு, முறையாக பராமரிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.



அந்த வகையில் தக்காளிச் செய்கையின் முதலாவது அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

இவ் அறுவடை செயற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்டச்செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர், உத்தியோகத்தர்கள் இணைந்து ஈடுபட்டனர் (நி)

# நீர்நிரம்பிய குழியில்
## தவறி விழுந்தவர் உயிரிழப்பு

(கொழும்பு)

எஹெட்டுவெவ - பெரவத்தவிற்குச் செல்லும் துணை வீதியின் இருபுறமும் உள்ள நீர்நிரம்பிய குழியின் ஒரு பகுதியில் தவறி விழுந்து, ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாலை இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பொல்ஹெனவத்த, கிரி உல்ல பகுதியைச் சேர்ந்த 68 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

எஹெட்டுவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி)

# மதவாச்சி - தலைமன்னார்
# ரயில் சேவை மீள ஆரம்பம்

(கொழும்பு)

மதவாச்சி - தலை மன்னார் இடையிலான ரயில் சேவை அடுத்த மூன்று வாரங்களுக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தையடுத்து ரயில் பாதைகளில் ஏற்பட்ட சேதத்தை சரிசெய்யத் தற்போது பழுது பார்ப்பு பணிகள் நடைபெற்று வருவதாக ரயில்வே திணைக்களத்தின் பாதைகள் மற்றும் பராமரிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. புத்தளம் ரயில் பாதையில் சேதமடைந்த இரு பாலங்களிலும் பழுதுபார்க்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்த பழுதுபார்ப்பு பணிகள் முடிவடைந்ததும் தற்போது நாத்தண்டியா வரை மட்டுமே இயக்கப்படும் ரயில் சேவைகள் புத்தளம் வரை நீடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## ரூ. 8.6 மில்லியன் மதிப்புள்ள பொருட்களுடன்
## மூன்று வர்த்தகர்கள் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 8.6 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை நாட்டிற்குள் கடத்த முயன்ற மூன்று வர்த்தகர்களைச் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கைது செய்தனர்.

விமான நிலையத்தில் உள்ள வருகை முனையத்தின் "கிரீன் சேனல்" பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் நீர்கொழும்பைச் சேர்ந்த 58 வயது வர்த்தகர் ஒருவரும், பண்டாரவளையைச் சேர்ந்த 38 வயதுடைய இரண்டு பெண் வர்த்தகர்களும் அடங்குகின்றனர்.

சந்தேகநபர்களின் பயணப் பைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகள் 220 கார்டன்கள், வெளிநாட்டு மதுபானம் 19 போத்தல்கள், சுகாதார அமைச்சகம் அல்லது தேசிய மருந்துகள் ஒழுங்குப் படுத்தல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படாத அழகு சாதன பயன்பாட்டிற்கான "கொளஜன்" 430 பொதிகள், காலணிகள் உள்ளிட்ட பிற வணிகப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் தற்போது விமான நிலைய சுங்க அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் தொடர்ந்துநடைபெற்று வருகின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்ட மக்களின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

# தையிட்டியில் காணிகளை இழந்தவர்களுக்கு மாற்றுக்காணி அல்லது இழப்பீடு!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(அராலி)

**தையிட்டி திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்த பொது மக்களுக்கு மாற்றுக்காணிகளை பெற்றுக் கொடுப்பது அல்லது இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகரன் தெரிவித்தார்.**

ஊடகவியலாளர் ஒருவர் தொடர்புகொண்டு வினவிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி திஸ்ஸ விகாரை தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்கிறோம். ஆனால் குறித்த விகாரை எமது ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட வில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால் அரசாங்கம் என்ற வகையில் குறித்த பிரச்சினையை நீடிக்காமல் முடிவுறுத்தவே எதிர்பார்க்கின்ற நிலையில் விகாரைக்காக காணிகளை இழந்த மக்களுக்கு உரிய மாற்றுக்காணிகளை வழங்குவது அல்லது தற்போதைய சூழ்நிலைக்கேற்ப அவர்களுக்கான இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு.

இழப்பீடு அல்லது மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு கூட எத்தனை பேரிடம் ஆவணங்கள் சரியாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க குறித்த பிரச்சனையை அரசியல் ரீதியாக மாற்றிக்கொண்டு செல்கிறார்கள்.

நாட்டின் மூவினங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் மதம் மற்றும் இனங்களுக்கு இடையில் மோதல்களை உருவாக்க முயற்சிக்கக் கூடாது.

ஆகவே, அரசாங்கம் திடமான ஒரு நிலைப்பாட்டில் இருக்கிறது. தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக காணிகளை இழந்த மக்களுக்கு இழப்பீடு அல்லது மாற்றுக்காணிகளை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என அமைச்சர் தெரிவித்தார். (3-104)

# இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு கோரிக்கை!




(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக இந்திய துணைத்தூதுவரிடம் வலிறுத்தியதாக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் தலைமையிலான குழுவினருக்கும் இந்திய துணைத்தூதுவருக்கும் இடையில் அண்மையில் இந்திய துணைத் தூதரகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

குறித்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், இந்த சந்திப்பில் இந்திய மீனவர்கள் மேற்கொண்டு வரும் அத்துமீறிய றோலர் மீன்பிடி காரணமாக வடக்கு மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதனால் கடல் வளங்கள் அழிவடைவதும், மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த பாதிப்புகளுக்கான இழப்பீட்டை பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும், மீனவர் சமூகத்தை பாதுகாக்க வேண்டிய தேவைகள் குறித்தும் பேசப்பட்டது. அதோடு சமகால அரசியல் மற்றும் சமூக விடயங்களும் கலந்துரையாடப்பட்டன என தெரிவித்தார். (3-33)

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், இலத்திரனியல் உபகரணங்கள், கைத்தொலைபேசிகள் மற்றும் தண்ணீர் மோட்டார் என்பன இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் குறித்த பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவோ அல்லது வங்கி அட்டை மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறித்த பொருட்களை ஏலத்தில் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டுமெனவும் அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக்கொள்ளும் குறித்த பொருட்களை உடனடியாக அன்றைய தினமே வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2026 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

1. நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பொது அறிவித்தலானது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. நகரசபை கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப்பெறுமதியின் 10% ஆன வரியொன்றினை 2026ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜுன் 30, செப்ரெம்பர் 30 மற்றும் டிசம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.

3. 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வருடாந்த ஆதனவரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும். குறித்த கந்தாயத்திற்குரிய கட்டணம் அக்கந்தாயத்தின் முதல் மாதத்திற்குள் செலுத்தப்பட்டால் 5% கழிவு அனுமதிக்கப்படும்.

4. மேற்சொல்லப்பட்ட பந்தி - 1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் ஆதனவரி செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15% உம் ஏனைய இடங்கள் மீது 20% உம் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.

5. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளையும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2026 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

6. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 2026 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம், வியாபார வரிக்கட்டணங்களைச் செலுத்தி 31.03.2026 காலப்பகுதிக்குள் உரிமம், பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளாத, வியாபார வரி செலுத்தாத வியாபார நிலையங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும்.

7. 2026 ஆம் ஆண்டிற்கான விளம்பரக் கட்டணங்களை செலுத்தி விளம்பரங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும். புதிதாக அமைக்கப்படும் விளம்பரங்கள் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தப்பட வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் நகரசபையினால் அகற்றப்படும்.

8. 2026 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமத்தகடுகளையும் வளர்ப்பு நாய்களுக்கான பதிவுகளையும் உரிய கட்டணங்கள் செலுத்தி மேற்கொள்ளவும்.

9. ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச்சொந்தக்காரர்கள் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகரசபையில் சமர்ப்பித்து பெயர்மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும்.

10. நகரசபைக்கு உட்பட்ட தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், எல்லைச்சுவர், குழாய்க்கிணறுகள் அமைப்பதாயின் அனுமதி பெற்று அமைக்கப்படல் வேண்டும். கட்டடத்தினை புனரமைப்பதாயினும் நகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ள வேண்டும். கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் நகரசபையுடன் தொடர்பு கொண்டு அமைவுச்சான்றிதழ் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழை (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.

11. நகரசபைக்குட்பட்ட நிலங்கள் பிரிக்கப்படும் போதோ அல்லது ஒன்றிணைக்கப்படும் போதோ நகரசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். பிரிக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட நிலத்தின் நில அளவைப்படத்திற்கான அனுமதியினைப் பெற்ற பின்னரே குறித்த ஆதனத்தில் அபிவிருத்தி வேலைகளையோ விற்பனை செயற்பாட்டினையோ மேற்கொள்ள முடியும்.

12. 2000 ஆம் ஆண்டு 22 ஆம் திகதிய **1159/22** ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. பொது மக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் திண்மக்கழிவுகளை நகரசபைக்கு ஒப்படைக்கும் போது தரம் பிரித்து வழங்க வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்.

**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(C-4673)

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தை அரசு வெளிப்படுத்த வேண்டும்
## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தல்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை அநுர அரசு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த வருடம் இலங்கைக்கு வந்திருந்தார். இதன்போது, இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கியமான விடயங்களில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

எனினும், ஒப்பந்தங்களின் அம்சங்கள் தொடர்பில் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் பாராளுமன்றத்திலும் வெளிப்படுத்தப்படவில்லை.

அத்துடன், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகவும் பெறமுடியாத நிலையே உள்ளது. எனவே, ஒப்பந்தங்களின் அம்சங்கள் தொடர்பில் அரசு வெளிப்படுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி)



சத்தியக்காட்டு சந்தையில் கடைத் தொகுதியை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 22 ஆம் திகதி வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன் தலைமையில் நடைபெற்றது. (படம்: கஜிந்தன்)

# மதுபோதையில் சாரத்தியம் 322 பேர் கைது

(கொழும்பு)

பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, மதுபோதையில் வாகனம் ஓட்டிய 322 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது 29,539 பேரை பொலிஸார் சோதனை செய்ததுடன், குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர் புடைய 15 பேர் உட்பட மொத்தம் 493 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில், 179 பேருக்கு நீதிமன்ற பிடியாணைகள் நிலுவையில் இருந்ததுடன், மேலும் 88 பேருக்கு திறந்த பிடியாணைகள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கவனக்குறைவாக வாகனம் ஓட்டிய குற்றச்சாட்டில் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஒரே நாளில் 4,414 போக்குவரத்து குற்றங் கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# மெக்சிக்கோவில் கவிழ்ந்த பேருந்து!

## 10 பேர் உயிரிழப்பு

## 30இற்கும் மேற்பட்டோர் காயம்



(மெக்சிகோ சிட்டி)

மெக்சிகோவில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பயணிகள் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

வடஅமெரிக்க நாடான மெக்சிகோவில் அதிவேகம் மற்றும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பேருந்து மற்றும் லொறிகள் விபத்துக்குள்ளாவது அடிக்கடி நடக்கும் சம்பவமாக மாறியுள்ளது.

கிறிஸ்மஸ் தினமான நேற்று முன்தினம் மெக்சிகோ சிட்டியில் இருந்து சிகோன் டெபெக் கிராமத்திற்கு சுமார் 40இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற பேருந்து ஜோன் டெகோமாட்லான் நகர் அருகே சென்ற பேருந்து, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அருகே இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், பேருந்தில் பயணித்த ஒரு குழந்தை உட்பட 10 பேர் உயிரிழந்தனர். 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதேபோல, கடந்த நவம்பர் மாதம் மிச்சோகன் பகுதியில் பேருந்து விபத்துக்குள்ளானதில் 10 பயணிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆயுதங்களின் மு...

# உலகளாவிய சமாதானத்திற்...

(வத்திக்கான்) ---------------

**உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரு... போரை முடிவுக்குக் கொண்டுவர நேர... வார்த்தைகளில் ஈடுபடும் "துணிச்சலை"... கொள்ள வேண்டும் என்று பாப்பரசு... வலியுறுத்தியுள்ளார்.**

வத்திக்கானில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில், தனது கிறிஸ்மஸ் உரையை வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஆயுதங்களின் முழக்கம் ஓயட்டும். சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன், சம்பந்தப்பட்ட தரப்பினர் நேர்மையான மற்றும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் துணிச்சலைப் பெற வேண்டும்" என்று பாப்பரசர் வேண்டுகோள் விடுத்தார்.

காசாவில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி குறித்து கவலை தெரிவித்த அவர், அங்குள்ள மக்கள் கடும் குளிரிலும் மழையிலும் கூடாரங்களில் தங்கியிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

"பாலஸ்தீன மக்களின் துயரங்களையும், காசாவில் மழையிலும் காற்றிலும் நனைந்து கொண்டிருக்கும் கூடாரங்களையும் நாம் எப்படி நினைக்காமல் இருக்க முடியும்?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

தாய்லாந்து மற்றும் கம்...

# புடின் அழிந்து போகட்டும் ஜெலென்ஸ்கி ஆவேசம்



(கீவ்)

ரஷ்ய ஜனாதிபதி புடின் அழிந்து போகட்டும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் நடந்த கிறிஸ்மஸ் விழாவில் அந்நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பேசியதாவது, ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்தாலும், உக்ரைன் மக்கள் பண்டிகைக் காலத்தில் நம்பிக்கையால் ஒன்றுபட்டுள்ளனர்.

ரஷ்யா மிக முக்கியமான இடங்களை ஆக்கிரமிக்கவும் அல்லது குண்டு வீசவோ முடியாது.

அனைவருக்கும் ஒரு விருப்பத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். அவர் (ஜனாதிபதி புடின்) அழிந்து போகட்டும் என்று நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே நினைத்துக்கொள்ளலாம்.

ஆனால் நாம் கடவுளிடம் ஒன்றைக் கேட்கிறோம். உக்ரைனில் அமைதி நிலவ வேண்டும். அதற்காக நாங்கள் போராடுகிறோம், அதற்கு ஜெபிக்கிறோம். முழுக் குடும்பமும் ஒரே இடத்தில் கூடும் போது அது மகிழ்ச்சி அளிக்கிறது எனத் தெரிவித்தார்.

ரஷ்யாவின் தாக்குதலை நிறுத்த அமெரிக்கா முயற்சித்து வரும் நிலையில், அந்நாடு தயாரித்த 20 அம்சத் திட்டம் கொண்ட அமைதி ஒப்பந்தத்தில் பெரும்பாலானவற்றை உக்ரைன் ஏற்றுக்கொண்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் உக்ரைன் ஏற்றுக்கொண்ட நிலையில், அந்த ஒப்பந்தம் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. இந்தச் சூழலில் ரஷ்ய ஜனாதிபதி புடின் அழிந்து போகட்டும் என ஜெலென்ஸ்கி பேசியது போர் தொடருமா என்ற கேள்வியை எழுப்பி உள்ளது. (நி)

# நைஜீரியாவில் ஐ.எஸ் இற்கு ... அமெரிக்கா சக்திவாய்ந்த தா...

(நைஜர்)

நைஜீரியா அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் வடமேற்கு நைஜீரியாவில் இஸ்லாமிய அரசு பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா ஒரு தாக்குதலை நடத்தியதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், அமெரிக்க இராணுவமும் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதக் குழு குறித்த பகுதியில் உள்ள கிறிஸ்தவர்களை குறிவைத்து தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் நைஜீரியா அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அமெரிக்காவின் இந்த அதிரடி நடவடிக்கை வந்துள்ளது.

தாக்குதல் தொடர்பில் சமூக ஊடகத்தளமான ட்ரூத் சோஷியலில் பதிவிட்டுள்ள ட்ரம்ப்,

நேற்று முன்தினம் இரவு தளபதியாக எனது வழிகாட்டுதலின் பேரில், வடமேற்கு நைஜீரியாவில் உள்ள ஐ.எஸ்:ஐ.எஸ் பயங்கரவாதக் குப்பைகளுக்கு எதிராக அமெரிக்கா ஒரு சக்திவாய்ந்த மற்றும் கொடிய தாக்குதலைத் தொடங்கியது.

அவர்கள் பல ஆண்டுகளாக, ஏன் பல நூற்றாண்டுகளாகக் கூட காணப்படாத அளவில் அப்பாவி கிறிஸ்தவர்களைக் குறிவைத்து கொடூரமாகக் கொன்று வருகின்றனர் என பதிவிட்டுள்ளார்.


இதேவேளை, நைஜீரிய அதிகா... கிணை... மாநில... குதல்... வும்... தீவிர... பட்டதா... இராணு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ழக்கம் ஓயட்டும்!

## ...ற்கு போப் அழைப்பு



இரு நாடுகளும்
...நரடிப் பேச்சு
...ல" வளர்த்துக்
...ரசர் லியோ

...போடியா இடையே நிலவும் எல்லை மோதல்களைக் குறிப்பிட்ட பாப்பரசர், இரு நாடுகளுக்கும் இடையிலான "பண்டைய நட்பு" மீண்டும் மலர வேண்டும் என்றும் சமாதானத்தை நோக்கி உழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா தலைமையிலான பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் நடந்து கொண்டிருந்தாலும், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே இது வரை நேரடிப் பேச்சு வார்த்தைகள் எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல், காசாவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நீடித்து வரும் போர் மற்றும் குளிர்கால புயல்களால் சுமார் 2.1 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இஸ்ரேலிய எல்லைகளின் வழியாக கூடுதல் நிவாரணப் பொருட்களை அனுமதிக்க வேண்டும் என்று உதவி முகாமைகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றன. (நி)

# மைதானத்தில் ஒன்று திரண்டு கிறிஸ்மஸ் கொண்டாடிய ரசிகர்கள்



(பேர்லின்)

ஜேர்மனியில் யூனியன் பேர்லின் கால்பந்து அணியின் ரசிகர்கள் 28,500 பேர் மைதானத்தில் திரண்டு கிறிஸ்மஸ் பாடல்களைப் பாடி கொண்டாடினர். 20 ஆண்டுக்கு முன் 89 ரசிகர்களுடன் தொடங்கி நேற்று முன்தினம் 28,500 ரசிகர்களுடன் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் நடைபெற்றது.

1997இல் திவாலாகிய அணியை காப்பாற்ற ரசிகர்கள் நிதி திரட்டியதன் நினைவாக, இக்குழு நிகழ்வு இடம்பெற்றது. (நி)



# ...கு எதிராக ...தாக்குதல்

...அதிகாரிகளுடன் ஒருங்...ிணைந்து சொகோட்டோ ...ாநிலத்தில் இந்தத் தாக்...ுதல் நடத்தப்பட்டதாக...யும். பல ஐ. எஸ் ...விரவாதிகள் கொல்லப்...பட்டதாகவும் அமெரிக்க ...ிராணுவத்தின் ஆபிரிக்க கட்டளைப் பிரிவு தெரிவித்துள்ளது.




இதனிடையே, அமெரிக்காவுடனான தொடர்ச்சியான பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக நைஜீரிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

போகோ ஹராம் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். மற்றும் ஜிஹாதி குழுக்கள் போன்றன வடகிழக்கு நைஜீரியாவில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பேரழிவை ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்து வருகின்றன.

தாக்குதலில் பாதிக்கப்படும் மக்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள் என்று உலகம் முழுவதும் அரசியல் வன்முறையை பகுப்பாய்வு செய்யும் ஒரு குழுவான ஆக்லெட் கூறுகிறது. (நி)

# 'ஸ்வன் நெபுலா' புகைப்படத்தை பகிர்ந்து வாழ்த்து தெரிவித்த நாசா



(வோஷிங்டன்)

ஹபிள் வான் தொலைநோக்கி மூலமாக எடுக்கப்பட்ட ஸ்வன் நெபுலா புகைப்படத்தை பகிர்ந்து கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை அமெரிக்காவின் "நாசா" அமைப்பு தெரிவித்து உள்ளது. இந்தப் புகைப்படம் இணையத்தில் வைரல் ஆகியுள்ளது.

நாசா ஒவ்வொரு கிறிஸ்மஸ் பண்டிகையின் போதும் விண்வெளியில் நடக்கும் கொண்டாட்டங்கள், விண்வெளி வீரர்கள் அனுப்பும் வாழ்த்துச் செய்திகள், மற்றும் "கிறிஸ்மஸ் மரம்" போன்ற வடிவங்களில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களின் படங்களைப் பகிர்ந்து வருகிறது. இது விண்வெளிப் பயணத்தின் பாரம்பரியத்தையும், பிரபஞ்சத்தின் அழகையும் காட்டுகிறது.

இந்த ஆண்டில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள வீரர்கள் பூமியில் உள்ள மக்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.


ஹபிள் வான் தொலைநோக்கி மூலமாக எடுக்கப்பட்ட ஸ்வன் நெபுலா புகைப்படத்தை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து நாசா கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

மேலும், கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!, இந்த வருடம், நாங்கள் உங்களுக்கு பரிசாக இந்தப் படத்தை வழங்குகிறோம் என அந்தப் பதிவில் நாசா குறிப்பிட்டுள்ளது.

இந்தப் புகைப்படம் இணையத்தில் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாளில்
# 61 மில்லியன் ரூபாய் வருமானம்
# வீதி அதிகார சபை தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் அதிவேக நெடுஞ் சாலைகளில் வாகனப் போக்குவரத்து மூலம் ஒரே நாளில் 61 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித் துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 6 மணி யுடன் நிறைவடைந்த 24 மணித் தியாலங்களுக்குள் 170,000இற்கும் அதிகமான வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியுள் ளன.

அதற்கு முந்தைய நாளிலும் 170,069 வாகனங்கள் பயணித்திருந் ததுடன், அதன்மூலம் 61.7 மில்லி யன் ரூபாய் வருமானம் கிடைத்துள் ளது.

பண்டிகைக்காலம் மற்றும் தொடர் விடுமுறை காரணமாக அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகன நெரிசல் அதிகமாகக் காணப்படுவதால், பயணிகள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவு றுத்தப்பட்டுள்ளனர். (ஙி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1993- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
3இல் சூரிசெவ்
கி-பா: 54
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BCom, HNDIT, MBA, Work(pvt)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16362

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:விசாகம்
உயரம்:6'3"
தகைமை/தொழில் -A/L,பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16365

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்:சித்திரை
1இல் செவ்
உயரம்:5'
தகைமை/தொழில்:O/L,சிங்கப்பூர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16366

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்:ரோகினி
1இல்செவ்
கி-பா-88
உயரம்:5'3"
தகைமை/தொழில்: O/L, France
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/16368

பிறப்பு:1989 - இந்து
நட்சத்திரம்: பூராடம்
கிபா- 33
உயரம்:6'1"
தகைமை/தொழில்: A/L, Driver (Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16369

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1986-இந்து
நட்சத்திரம்-பூரட்டாதி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: AIB, CGMA, Assistant Manager(Bank)
எதிர்பார்ப்பு: வெளிநாடு (IT)
தொ.இ: G/15798

பிறப்பு - 1996 - இந்து
நட்சத்திரம்: அத்தம்
7 இல் செவ்
கிபா- 33
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்
தொ.இ: G/15265

பிறப்பு-1994 - இந்து
நட்சத்திரம்: சதயம்
கிபா-18
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: PHD,Scientist (France)
எதிர்பார்ப்பு - விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/15182

பிறப்பு-1995-RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BFA, Teacher
எதிர்பார்ப்பு: அரச-தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15604

பிறப்பு: 1990-இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா:17 1/4
7இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSMS பட்டதாரி
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/13588

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 507



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# எப்பவும் பிஸி

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஒரு அலுவலகத்திலே வேலை பார்க்கிறார். பெரிய நெருக்கடியான வேலை எதுவும் இல்லை. இருந்தாலும் எந்த நேரம் போய்ப் பார்த்தாலும் ரொம்ப "பிஸி" யாக இருப்பதாகக் காட்டிக்கொள்வார். அப்படி ஒரு சுபாவம் அவருக்கு!

சார் உங்களைத் தான் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். என்று சொன்னால் போதும். உடனே "கொஞ்சம் இருங்கள்! என்று சொல்லிவிட்டு மேசை மேலே கிடக்கின்ற ஃபைல்களை எல்லாம் எடுத்துப் பரபர என்று திருப்புவார். அடுக்குவார். யாருக்காவது போன் செய்வார். மறுபடியும் வைப்பார். எடுப்பார்.

இப்படி ஏதாவது செய்துவிட்டு, இப்போது சொல்லுங்கள். என்ன விடயம் என்பார்.

வெளியிலேயிருந்து யாராவது ஃபோன் செய்கிறார்கள் என்று வையுங்கள். போனை எடுத்து உடனே பேசுவதில்லை. கையிலே கொஞ்சம் நேரம் எடுத்து அப்படியே சும்மா வைத்திருக்கிறது. அதன் பின்பு பேசுவது. அப்போதுதான் இவர் ரொம்ப பிஸியாக இருக்கிறார் என்று ஃபோன் செய்பவர்கள் நினைப்பார்களாம்.

இப்படிப்பட்டவர்களை நீங்களும் சில இடங்களிலே பார்த்திருக்க லாம். பிஸியாக இருக்கிறதாக நடிக்கிறது இருக்கு பாருங்கள். இந்தப் பழக்கம் இப்படியே நீடித்தால் பின்னால் பெரிய மனநோயாளியாகக் கூட ஆகலாம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். இவர்கள் நடிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்பவர்கள். இவர்களை கேலியாகப் பார்ப்பார்கள். அப்படிப் பார்ப்பது கண்ணிலே பட்டுவிட்டால் இன்னமும் மனதுக்கு வருத்தமாகிப் போய்விடும்!

இப்படி பரபரப்பாக இருக்கிறதாக நடிக்கிறார்களே இவர்களைப் பற்றி மனோதத்துவ நிபுணர்கள் என்ன எல்லாம் சொல்கிறார்கள் தெரியுமா?

பதவியிலே அவர்கள் இவர்கள் எல்லாம் விரும்புகின்ற காரியங்களையும் அந்தஸ்தையும் பெறமுடியாத சூழ்நிலையிலே தங்களுடைய "ஈகோ" வைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இப்படி செய்கிறார்களாம்.

மனிதனுடைய மனம் இது மாதிரி சந்தர்ப்பங்களிலே ஏதாவது சில காரணங்களை கற்பித்து சமாதானம் அடையுமாம்! பரீட்சையிலே பாஸாகாத மாணவர்கள் ஆசிரியர்களைக் குறை சொல்வது. அதுகூட இப்படித்தானாம்.

இதை மனதின் தற்காப்பு சாதனங்கள் என்று சொல்கிறார்கள். Defence Mechanism! பிஸியாக இருக்கின்றதாகக் காட்டிக்கொள்வதும் அப்படிப்பட்ட ஒருவகை பரபரப்பு தானாம்!

ஒருவருக்கு அவருடைய பதவியிலே உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையிலே இப்படி பரப்பரப்பாக இருப்பதாக நடித்துக்கொண்டு அதை அடைந்ததாகத் திருப்திப் பட்டுக் கொள்வார்! Alcoholic என்று சொல்கிறோம். அதுமாதிரி இந்தக் குணத்தை Workaholic என்றும் சொல்லலாம்!

இது போன்ற ஆசாமிகள் எல்லாம் மனநல மருத்துவர்களிடம் சென்று விடயத்தைச் சொல்லி ஆரம்பத்திலேயே குணப்படுத்திக் கொள்வது நல்லது.

இனிமேல் யாராவது உங்களிடம் நான் இருபத்து நான்கு மணிநேரமும் "பிஸி" என்று சொன்னால் அல்லது எப்பவும் பிஸியாக இருப்பது மாதிரி நடித்தால் அவர்களை கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். சரி! இந்த நிலைமையை தவிர்ப்பது எப்படி?

ஒருவரை எந்த நாற்காலியிலே (பதவியிலே), கொண்டு போய் உட்கார வைத்தாலும். அந்த நாற்காலிக்குப் பொருத்தமாகத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். வேலையைக் கற்றுக் கொள்ள வேண்டும். பதவிக்குரிய வேலை நன்றாகப் பழக்கப்பட்டுப் போனால் இந்தப் போலித்தனமான நடிப்புக்கு அவசியமில்லாமல் போய் விடும்!

ஒரு நாள் காலை 10 மணி.

எப்பவும் பிஸியாக இருக்கின்றதாகச் சொல்லுகின்ற ஒரு ஆபீசர். ஆபீசை விட்டு அவசரமாக வெளியே ஓடிவந்து கொண்டிருந்தார். "என்ன சார் இது. எல்லோரும் அவசரமாக ஆபீசுக்கு வருகிற நேரம் இது. நீங்கள் அவசரமாக வெளியே ஓடி வருகிறீர்களே?" என்றேன்.

"தினமும் கையோடு கொண்டு வருகின்ற ஒரு முக்கியமான விடயத்தை இன்றைக்கு வீட்டிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டேன். அது தான் நான் அவசரமாகப் போகிறேன்!" என்றார்.

"அதற்கு ஏன் இப்படி ஓட வேண்டும். பேசாமல் உங்கள் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு போக வேண்டியது தானே" என்றேன்.

"நான் வீட்டிலே விட்டுட்டு வந்ததே என்னுடைய ஸ்கூட்டரைத்தானே சார். அதை எடுத்துக்கொண்டு வரத்தான் ஓடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு வேகமாக ஓடி மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் வயல்களில் அதிகரிக்கும் நோய்த்தாக்கங்கள்!

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்

(கிளிநொச்சி)

**நெல் வயல்களில் மடிச்சுக்கட்டி, மஞ்சளாதல், கபில நிறத் தத்தி மற்றும் வெண்புமுத் தத்திகளின் தாக்கங்கள் அதிகளவு காணப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வீ. சோதிலட்சுமி தெரிவித்துள்ளார்.**

டித்வா புயல் தாக்கத்தின் பின்பு நெல் வயல்களிற்கு ஏற்படும் நோய் நிலைமைகளை ஆராயும் நோக்கில் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வீ. சோதிலட்சுமி மற்றும் பாடவிதான உத்தியோகத்தர், விவசாயப் போதனா ஆசிரியர் உள்ளிட்டோர் மகிழங்காடு கமக்காரர் அமைப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கள விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில் அண்மையில் ஏற்பட்ட டித்வா புயலின் தாக்கத்தினால் நெல் வயல்களில் அதிகளவில் கபில நிறத்தத்திகள் மற்றும் வெண்புமுத் தத்திகளின் தாக்கங்களை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் பூச்சித் தாக்கம், பங்கசு தாக்கம் மற்றும் போசனை பற்றாக் குறை போன்றவற்றால் ஏற்படும் மஞ்சளாதலிற்கான காரணங்கள் குறித்தும் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

எனவே விவசாயிகள் ஒவ்வொரு நாளும் தங்களது களங்களைப் பார்வையிட்டு குறித்த தாக்கங்கள் நெல் வயல்களில் ஏற்பட்டு இருக்குமாயின் சிபார்சு செய்த மருந்துகளை விவசாயப் போதனா ஆசிரியரின் அறிவுறுத்தலுக்கமைய விசிறி கட்டுப் படுத்த முடியும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# இலக்கியா தென்றல் அமைப்பால் உலருணவுப் பொதிகள் வழங்கல்

(சாவகச்சேரி)

இலக்கியா தென்றல் அமைப்பு ஊடாக கடந்த புதன்கிழமை முல்லைத்தீவில் 130 மாற்றுத் திறனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இலக்கியா தென்றல் அமைப்பின் நிறுவுநர் தனுஸ் மாஸ்ரர் முயற்சியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மேற்படி உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பெரும்பாலும் சக்கர நாற்காலியின் உதவியோடு இயங்கும் மாற்றுத் திறனாளிகளுக்கே மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# கலை நிகழ்வும் மாணவர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மத்திய முன் பள்ளியின் வருடாந்த கலை நிகழ்வானது இன்று சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு தில்லையம்பதி திருக்கோயில் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மத்திய சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரான சின்னத்தம்பி ஆனந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்விப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப் பாளர் இரட்நாயகம் கணேச லிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 900 | 200 | 700-900 | 800 | 700 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 220 | -- | 350 | 300 |
| பச்சைமிளகாய் | 250 | 1300 | 300 | 1300 | 1200 | 1300 |
| தக்காளி | 250 | 650 | 250 | 650 | 650 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 280 | 150 | 350 | 100 |
| கோவா | 200 | 300 | 200 | 300 | -- | 260 |
| கரட் | 200 | 350 | 250 | 350 | 320 | 270 |
| பூசணி | 80 | 140 | 100 | 120 | -- | 90 |
| புடோல் | 200 | 450 | 150 | 450 | 400 | 380 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 60-100 | 100 | 130 |
| சின்ன வெங்காயம் | 350 | 250-300 | 250 | 200-350 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 250 | 150 | -- | 220 | -- |
| பாகற்காய் | 600 | 1300 | 500 | 1600 | 800 | -- |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 250-300 | 280 | 300 |
| கருணைக் கிழங்கு | 250 | 260 | 250 | 300 | -- | 300 |
| பயற்றங்காய் | 600 | 700 | 400 | 700-800 | 600 | 750 |
| லீக்ஸ் | 300 | 350 | 250 | 350 | -- | 260 |
| பீற்றூட் | 150 | 600 | 250 | 500 | 650 | -- |
| கறிமிளகாய் | 350 | 1000 | 400 | 1300 | 1200 | 900 |
| முருங்கைக்காய் | 200 | -- | 250 | 2000 | -- | -- |
| போஞ்சி | 400 | 700 | 400 | 650 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 650 | 300 | -- | -- | -- |
| கீரை – 1 பிடி | 160 | 180-250 | 150 | 180 | -- | 170 |
| தேசிக்காய் | 1500 | 600 | 2000 | 200-450 | 300 | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 70-170 | -- | 120 |
| இராசவள்ளி | 750 | 700 | 1000 | 480 | -- | 475 |
| வெங்காயப்பூ | 400 | 1000 | 500 | 700 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 250 | 150 | 120 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 100 | -- | -- | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | -- | -- | 50 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 50-80 | -- | 70 |

# இராசிபலன்

27.12.2025
மார்கழி 12 , சனிக்கிழமை
சப்தமி முற்பகல் 9.31 மணிவரை

உத்தரட்டாதி பின்னரவு 5.19 மணிவரை
சுபநேரம்- 3.27-4.57 மணிவரை
இராகுகாலம் - 9.27-10.57 மணிவரை

சந்திராஷ்டமம்- பூரம்

வளவன்


மேஷம்

புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வெளியூர் தொடர்புகள் விரிவடையும், வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.


கடகம்

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


துலாம்

தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், உடல் நலன் சீராகும்.


மகரம்

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், பிற இனத்தாரால் பெருமைகள் வந்து சேரலாம்.


ரிஷபம்

பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.


சிம்மம்

வாகனப் பழுது செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டில் வளர்ச்சி கூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.


விருச்சிகம்

தூரத்தில் இருக்கும் உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி கூடும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, கோரிக்கைகள் நிறைவேறும் நாள்,


மிதுனம்

பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கட்டிடப்பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கன்னி

பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு.


மீனம்

குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

பகைவரையும் நண்பராகக் கருதும் பண்பாளன்தான் உலகத்தை வசப்படுத்த முடியும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 943



இன்றிரவு குரவைக்கூத்தைச் சீக்கிரம் முடித்துவிட்டு, அவரவர்களும் சீக்கிரமாகத் தூங்குங்கள். ஐயா! வேட்டைக்காரர்களுக்கெல்லாம் இப்போதே சொல்லி வைத்துவிடுங்கள். வந்தியத்தேவா! வா! நம்முடைய ஜாகைக்குப் போகலாம்!" என்று சொல்லி ஆதித்த கரிகாலன் வந்தியத்தேவனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு புறப்பட்டான். கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் அவர்களைச் சிறிது அசூயையுடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சம்புவரையர் வேட்டைக்காரர்களுக்குக் கட்டளை பிறப்பிப்பதற்காகச் சென்றார். பழுவேட்டரையர் நந்தினியைத் தேடி அந்தப்புரத்துக்குப் போனார்.

### 38ஆம் அத்தியாயம்
### நந்தினி மறுத்தாள்

பழுவேட்டரையர் சிறிது உற்சாகத்துடனேயே நந்தினியைப் பார்க்கப் போனார். கடம்பூருக்கு அவர் புறப்பட்டு வந்த போது என்ன நம்பிக்கையுடன் வந்தாரோ, அது ஒன்றும் இது வரையில் நிறைவேறவில்லை. சிறு பிள்ளையாகிய ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் மாளிகையிலே தருவித்து வைத்துக் கொண்டால், அவனை நயத்தினாலும் பயத்தினாலும் தம்முடைய விருப்பத்தின்படி நடக்கச் செய்யலாம் என்று அவர் எண்ணியிருந்தார். தாமும் சம்புவரையரும் சொல்லுவதற்கு அவன் கட்டுப்பட்டே தீரவேண்டும் என்று நம்பினார். சோழ ராஜ்யம் முழுவதற்கும் மதுராந்தகனுக்கு உடனடியாகப் பட்டம் கட்டுவதிலுள்ள அபாயம் அவருக்குத் தெரிந்தேயிருந்தது. வடக்கே மலையமானும், தெற்கே கொடும்பாளூர் வேளானும் அதற்கு விரோதமாயிருப்பார்கள். கரிகாலன் அவர்களுடன் சேர்ந்து கொண்டால் உள்நாட்டு யுத்தம் மூண்டே தீரும். அதன் முடிவு எப்படியாகும் என்று யார் சொல்ல முடியும்? பொது மக்களில் பெரும்பாலோர் சுந்தர சோழருடைய புதல்வர்களின் பக்கமே இருப்பார்கள். மதுராந்தகனுடைய தாயே அவனுக்கு விரோதமாயிருக்கிறாள். காலாமுகக் கூட்டத்தாரை மட்டும் நம்பி உள்நாட்டுப் போரில் இறங்க முடியுமா? பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும் பாலாற்றுக்கு வடக்கேயுள்ள நாடுகளிலும் கலகங்கள் கிளம்பினாலும் கிளம்பும். ஆகையால் இப்போதைக்கு மதுராந்தகனுக்குப் பாதி ராஜ்யம் என்று பிரித்துக் கொண்டால், அதுவும் தஞ்சையை தலைநகராகக் கொண்ட தென் சோழ ராஜ்யமாயிருந்தால், பிற்பாடு போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம். கொடும்பாளூர் வேளானின் செல்வாக்கை ஒரு வழியாகத் தீர்த்துக் கட்டிவிடலாம். பிறகு வடக்கே திரும்பித் திருக்கோவலூர் மலையமானையும் ஒரு கை பார்க்கலாம். கரிகாலன் வெறும் முரடன், என்றைக்காவது ஒரு நாள் ஏதாவது ஏடாகூடமான காரியத்தில் இறங்கி அற்பாயுளில் இறக்கக்கூடும். அப்படி நேர்ந்தால், எல்லாக் கவலையும் தீர்ந்தது. இப்போதைக்குப் பாதி ராஜ்யம் என்று ஏற்பாடு செய்து கொள்வது நல்லது.


இளைய ராணி நந்தினியுடனும் கலந்தாலோசித்ததின் பேரில் பெரிய பழுவேட்டரையர் இத்தகைய முடிவுக்கு வந்து, அதன் பிறகுதான் கடம்பூருக்கு வந்தார். கரிகாலனையும் அங்கு அழைத்து வரச் செய்தார்.

தொடரும்...



## சிறுவர் அரங்கம்

## நாம் செய்யும் காரியங்களும் பேசும்



ஒரு ஊரில் ஒரு குயவன் அவன் தாய், மனைவி மற்றும் மகனுடன் வாழ்ந்து வந்தான். குயவனின் மனைவிக்கு அவளது மாமியாரைப் பிடிக்கவில்லை. அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பத் துணிந்தாள். குயவனை தினமும் நச்சரித்தாள். அவனது அம்மாவை பக்கத்தில் ஒரு வீட்டில் குடியமர்த்தும் படி சொன்னாள்.

வெகு நாட்கள் குயவன் அவள் சொன்னதை காதிலேயே போட்டுக் கொள்ளாமல் இருந்தான். மனைவி விடாமல் நச்சரித்தாள். அவனது அம்மாவிற்குத் தனியாக இருந்தால் ஒரு குறையும் வராது என்றும், அவரது சாப்பாட்டுத் தேவையைத் தான் கவனித்துக் கொள்வதாகவும் சொன்னாள்.

ஒரு நாள் குயவனுக்கு நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. அம்மாவை இருபது அடி தள்ளியிருந்த ஒரு வீட்டில் குடியமர்த்தினான். மனைவி மாமியாரிடம் குயவன் செய்த தட்டு ஒன்றைக் கொடுத்து, வேளாவேளைக்குத் தன் வீட்டுக்குத் தட்டை எடுத்து வந்தால் அதில் உணவு நிரப்பித் தருவதாகவும், அதை மாமியார் அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று மகிழ்ச்சியாகச் சாப்பிடலாம் என்றும் கூறினாள். மாமியாருக்கு இது அவமானமாகத் தோன்றினாலும், தன் மகனுக்காக வாயைத் திறக்காமல் மருமகள் சொன்ன வழியில் வாழ்ந்து வந்தாள். பேரனுக்குப் பாட்டி வீட்டை விட்டுப் போனது அறவே பிடிக் கவில்லை. அவன் அம்மாவுக் குத் தெரியாமல் சில சமயம் பாட்டி வீட்டிற்குச் சென்று விளையாடுவான்.

அவன் வளர வளர குயவன் மண்பாண்டம் செய்வதைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். சில சமயம் குயவன் வேலை செய்யாத போது அவனது இயந்திரத்தை மகன் இயக்கிப் பார்க்க ஆரம்பித்தான். ஒரு நாள் மகனுக்கு அப்பாவைப் போலவே மண்பாண்டம் செய்ய வந்தது.

மிகச் சிறு வயதிலேயே அவன் அப்பாவின் தொழிலைக் கற்றுக் கொண் டான். அவன் முதல் முதலில் தன் அம்மாவுக்கு [illegible] தட்டு ஒன்றைச் செய்தான். அதை அவன் அம்மாவிடம் கொடுத்த போது அவள் மக னின் திறமையை நினைத்து பெருமைப்பட்டாள். தனக்கு அவன் முதலில் பொருள் செய்து கொடுத்ததை எண்ணி அளவில்லா மகிழ்ச்சி அடைந் தாள். தனது சிறிய மகனை இவ்வாறு கேட்டாள்: "மகனே! நீ செய்த தட்டு மிக அருமை. எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எத்தனையோ பாண்டங்கள் இருக்கும் போது ஏன் எனக்கு ஒரு தட்டைச் செய்து தர வேண்டும் என்று உனக்குத் தோன்றியது?"

மகன் குழந்தைத் தனமாகச் சொன்னான்: "அம்மா! ஒரு நாள் நான் அப்பாவைப் போலக் கல்யாணம் செய்து கொள்வேன். அப்போது நீ பாட்டியைப் போல பக்கத்து வீட்டுக்குப் போய் விடுவாய் அல்லவா. அப்போது உனக்கு என் மனைவி தினமும் சாப்பாடு கொடுக்க ஒரு தட்டு வேண்டு மல்லவா! அதைத் தான் உனக்கு நான் இப்போது செய்து கொடுத்தேன்" குயவனின் மனைவிக்குத் தான் செய்த காரியத்தின் தீவிரம் புரிந்தது.

மிகவும் வருந்தினாள். மாமியாரைத் தன் வீட்டுடன் வரவழைத்து மிகவும் அன்புடன் கவனித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்துக் கொள்ளுங்கள்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொல்லியல் திணைக்களம் தொல்லை தரும் திணைக்களமா?

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஒரு காலத்தில் தமிழர்களின் அரசியல் தொடர்பான தீர்மானங்களை எடுக்கின்ற மாபெரும் கூட்டங்கள் நடந்த முற்றவெளி நீண்டநெடுங்கால வரலாற்றைக் கொண்டது.

தவிர, யாழ்ப்பாண நகரத்தை அபிவிருத்தி செய்யும்போது அதற்கு யாழ்.முற்றவெளியின் நிலப்பரப்பு தேவையாக இருக்கும்.

சுருங்கக்கூறின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மூச்செடுக்க முடியாத அளவில் கட்டடங்களால் நிரம்பி வழிகிறது.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையை விஸ்தரிப்பதாயின், அதற்கு இருக்கக்கூடிய ஒரே வழி யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையம் அமைந்துள்ள இடம் மட்டுமேயாம்.

இங்குதான் யாழ்.போதனா வைத்திய சாலையை விஸ்தரிப்பதற்கு யாழ்.பஸ்தரிப்பு நிலையத்தை ஈகை செய்வதாயின், யாழ்ப்பாண மத்திய பஸ் தரிப்பு நிலையம் யாழ்.முற்றவெளிக்கு இடமாற்றப்பட வேண்டும் என்பது நகர அபிவிருத்தியில் கருசனை கொண்டவர்களின் கருத்து.

எனினும் தற்போது யாழ்.முற்றவெளியை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்தி அதனை எல்லைப்படுத்தி வருகிறது.

இங்குதான் முற்றவெளியை எல்லைப்படுத்தும் வகையில் சிமெந்துக் கற்கள் நாட்டப்படுகின்றன.

இதில் தொல்லியல் திணைக்களம் நகர அபிவிருத்தி சார்ந்த சட்டதிட்டங்களைப் பின்பற்றாமல், தான் நினைத்தபாட்டில் எல்லைக் கல்லுகளை நாட்டி வருகிறது.

அதிலும் யாழ்.பண்ணை வீதிக்குச் செல்லுகின்ற வீதியின் ஓரமாக எல்லைக்கல்லுகளை நாட்டியிருப்பது ஓர் அரச அமைப்பு சட்டத்தை எப்படி மீறுகின்றதென்பதற்கு தக்கசான்றாகும்.

ஆம், போக்குவரத்து நெருக்கடிமிக்க – 24 மணிநேரமும் வாகனங்கள் பயணிக்கின்ற இருவழிப் பாதை கொண்ட பண்ணை வீதியைத் தொடுக்கும் தெருவின் ஓரமாக, எல்லைக் கல்லை நாட்டியிருப்பதன் மூலம் விபத்துக்கள் நடந்தாலும் அதுபற்றித் தொல்லியல் திணைக்களம் கவலை கொள்ளமாட்டாது.

நாங்கள் தனித்துவமானவர்கள். நாங்கள் சிங்கள இனத்துக்கான திணைக்களமேயன்றி, ஏனைய இனங்கள் எங்களுக்குப் பொருட்டல்ல என்பது போல தொல்லியல் திணைக்களம் செயற்பட்டுள்ளது.

அதேநேரம் பொதுமக்களின் விடயத்தில் நாடாபிடித்து அளந்து அளவு பிழைத்தால் சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றில் நிறுத்துகின்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையும் யாழ்.மாநகர சபையும் தொல்லியல் திணைக்களம் சட்டவிதிகளை மீறி சிமெந்துக் கல்லுகளை எல்லையில் நாட்டும் போது மௌனமாக இருந்ததன் உள்ளார்ந்தம்தான் புரியவில்லை.

எதுஎவ்வாறாயினும் தொல்லியல் திணைக்களம் இனபேதம் கடந்து – சட்டதிட்டங்களை மதித்து தனது பணியை ஆற்ற வேண்டும்.

# யாழ். ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சிறீதரன் - அர்ச்சுனா கடும் வாக்குவாதம்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனுக்கும் இடையே யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

நேற்றைய இக் கூட்டத்தில்,

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கான சுற்று நிருபம் தொடர்பான விவாதத்தின் போது இவ்வாறு வாக்குவாதம் ஏற்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கருத்துத் தெரிவிக்கும்போது பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் குறுக்கிட்டார். இதன்போது "குட்டி நாயைப் போன்று குரைத்துக்கொண்டு இருக்கக் கூடாது" என சிறீதரன் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா, ஒரு பாராளுமன்ற உறுப்பினரான இளங்குமரனைப் பார்த்து எவ்வாறு நாய் எனக்கூறமுடியும்? எனக் கேள்வி எழுப்பினார்.

படிப்பறிவு இருக்க வேண்டும். கைநாட்டு அரசியலை செய்யும் தமிழரசுக் கட்சியின் அரசியல்வாதிகளுக்கு இவ்வாறான செயற்பாடுகள் தெரிவதில்லை என விமர்சித்திருந்தார்.

இதன்போது கடும் தொனியில் சிறீதரன் எம்.பி, உனக்குப் படிப்பறிவு இருக்கிறதா? நாங்கள் கைநாட்டு என்றால் நீ கால்நாட்டா எனக் கூறினார். இதன்போது சபையில் சலசலப்பு ஏற்பட்டது. (ம-7,104)

# தையிட்டி விகாரை தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?

## அமைச்சர் சந்திரசேகரிடம் கேள்வி எழுப்பிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை தொடர்பில் என்ன நிலைப்பாடு என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அமைச்சர் சந்திரசேகரிடம் கேள்வி எழுப்பிய போது அமைச்சர் பதில் சொல்லத்தயங்கிய நிலையில் அந்தச் சூழலைக் குழப்பும்வகையில்தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போதே குறித்த சம்பவம் இடம்பெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இறுதிக் கட்டத்தை எட்டிய நிலையில் தையிட்டி விகாரை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் கேள்வி எழுப்பியபோது, விகாரையை உடைக்க முடியாது என்று அமைச்சர் பதிலளித்தார்.

ஏன் சட்டவிரோத விகாரையை உடைக்க முடியாது என அமைச்சரிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பதில் கேள்வி கேட்டபோது அமைச்சர் பதில் சொலலத் தயங்கினார்.

அந்தச்சூழலில் அமைச்சர் பதில் சொல்லும் சூழலை குழப்ப தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் சம்பந்தமே இல்லாமல் எழுந்து நீங்கள் முரண்பட வேண்டாம். எங்கள் பிரச்சினையைத் தீருங்கள் என தெரிவித்தனர்.

இதன்போது பிரதேச சபை தவிசாளர்கள் எழுந்து, தையிட்டி விகாரை பிரச்சினை முக்கியமானது. அதற்கு அமைச்சர் பதில் சொல்லட்டும். அதன் பின்னர் உங்கள் பிரச்சினையைப் பார்க்கலாம் எனச் சொல்லும் போதும் குறித்த தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கேள்வி கேட்டுக் குழம்பினர்.

இந்நிலையில் அமைச்சர் சந்திரசேகர் கூட்டத்தை முடித்து விட்டு எழுந்தார். (ம-7)

# காலியில் துப்பாக்கிச் சூடு 6 சந்தேக நபர்கள் கைது

(காலி)

காலி மாவட்டம் அம்பலாங்கொடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹிக்கடுவ பிரதேசத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, குறித்த சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் காலி குற்றத்தடுப்புப் பிரிவினராலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் ஒரு ரிவோல்வர் ஆகிய துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# பந்தயத்திற்கு மோட்டார் சைக்கிள் ஓட்டிய 7 பேர் கைது

பணப்பந்தயத்திற்காக மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டியில் ஈடுபட்ட 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மொரட்டுவ, எகொடை உயன மற்றும் பாணந்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18, 19, 20, 21 மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இரவு வேளையில் பழைய காலி வீதியில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அதிக சத்தத்துடன் மோட்டார் சைக்கிள் ஓட்டிய 7 இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

# நுவரெலியா தலவாக்கலையில் பிரதேச செயலகத்திற்கு முன் நபர் ஒருவர் தீக்குளிக்க முயற்சி

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டம் தலவாக்கலை பிரதேச செயலகத்துக்கு முன்பாக தனக்குத்தானே தீவைத்துக் கொண்டு உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்த ஒருவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நேற்றுப் பிற்பகல் தீ வைத்துக் கொள்ள முயற்சித்துள்ளார்.

எனினும்குறித்த பகுதி மக்கள் துரித கதியில் செயற்பட்டு அவரைக் காப்பாற்றி அவசர நோயாளர் காவு வாகனம் ஊடாக மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் அவர் மருத்துவமனையில் இருந்து வெளியேறிய பின்னரே மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க முடியும் எனத் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# மின்சாரம் தாக்கியதில் 7 வயது மாணவி மரணம்

(மாத்தறை)

மாத்தறை மாவட்டத்தின் வரல்ல பகுதியைச் சேர்ந்த 7 வயது பாடசாலை மாணவி ஒருவர் நேற்று மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் ஏழு வயது மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் வரல்ல பகுதியில் வசித்து வருகிறார். மாணவி வைத்திருந்த அளவிடும் நாடா தனது வீட்டோடு இணைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியின் இரண்டு கம்பிகளில் பட்டதால் மின்சாரம் தாக்கியுள்ளது.

உடனடியாக மாணவி மொரவாக்கவில் உள்ள கொஸ்னில்கொட அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அம்பிகையின் பரத நிருத்திய அரங்கப் பிரவேசம் யாழ்ப்பாண சமூகத்துக்கான பரிசு'



## யாழ். இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீமான் சாய்முரளி



கொக்குவில் கலாபவனம் கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்களின் மாணவியும் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன்- கலாநிதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோரின் புதல்வியுமான செல்வி அம்பிகை சண்முகலிங்கன் அவர்களின் பரத நிருத்திய அரங்கப் பிரவேசம் இம்மாதம் 5 ஆம் திகதி மாலை, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்ற வேளை வரவேற்புரை வழங்கிய பேராசிரியர் சண்முகலிங்கன், அம்பிகை எங்கள் புதல்வி, எங்கள் வாழ்வெனும் கவிதையின் பொருளாக வாய்த்தவள், அவளை ஒரு கலைச் செல்வியாக, எங்கள் பண்பாட்டின் செல்வியாக காண்பது எங்கள் வாழ்வின் இலக்கணமாகவும் அர்த்தமாகவும் விளங்குகின்றது என குறிப்பிட்டார்.

முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவர் ஸ்ரீமான் சாய்முரளி அவர்கள் தமிழர் பண்பாட்டு இதயத்தின் மையத்தில் உள்ள கலை வடிவத்தினை நேர்மையுடன் பயின்று பக்குவமாய் அளிக்கை செய்த அம்பிகையின் இன்றைய நிகழ்ச்சி யாழ்பாண சமூகத்துக்கான பரிசு என்பேன் என்றார்.

மேனாள் துணை வேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தமது தலைமை உரையில் அம்பிகையின் கலைத்துறை ஈடுபாடினையும் நடனச் சிறப்பினையும் பாராட்டினார்.

ஆசியுரை வழங்கிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் "தெய்வக்குழந்தை அம்பிகையின் ஆற்றல் வியப்பினைத் தருகின்றது. அவரின் குனித்தபுருவமும் கொவ்வைச்செவ்வாயின் குமிண் சிரிப்பும் தனித்துவமானவை" என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா அவர்கள் தமதுரையில் "சிறந்த கலைஞரான மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் - நல்லாசிரியை கலாநிதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோரின் செல்வக்குழந்தையான அம்பிகை கலைமகளின் குழந்தை என்பதனை உறுதிப்படுத்துவதாய் இந்த நிருத்திய அரங்கப்பிரவேசம் மன நிறைவினைத் தருகின்றது. இன்று எம் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவியாக இணைந்துள்ள அம்பிகை எதிர் காலத்தில் எமக்கு பல பெருமைகளைச் சேர்ப்பாள்" என்றார்.


சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் அவர்களும் தமிழ்நாடு காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக பேராசிரியர் ஒ.முத்தையா அவர்களும் அம்பிகையின் அபிநய சிறப்பினையும் பக்குவமான பாவ வெளிப்பாடினையும் நயந்து வாழ்த்தினர். "அம்பிகையின் ஆடல் அரங்கேற்றம் மிகமிக நேர்த்தியானது. தத்துவ பூர்வமான அவரின் பாவ வெளிப்பாட்டினை கண்கலங்கிட ஆசையாக ரசித்தேன். வாத்சல்ய பாவத்தினை அற்புதமாக வெளிப்படுத்தும் பாடல்களைப் புரிந்து கொண்டு ஆடுவது என்பதனைத்தாண்டி அந்தப் பாடலே தாமான பாவமும் அபிநயமும் அம்பிகையின் முத்திரை என்பேன். கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்களின் அரங்கேற்றங்களின் நிறைகுடமாக அம்பிகையின் அரங்கேற்றம் அமைந்தது என, கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட ஈழத்து மூத்த பரதக்கலை ஆளுமையான கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரக் குமார் தமதுரையில் குறிப்பிட்டார்.



குருவான கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன் அவர்களுடன் அணிசெய் கலைஞர்களாக நட்டுவாங்கம் -நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் முதுகலைமாணி ஸ்ரீமதி தேவந்தி திருநந்தன், பாட்டு-இராமநாதன் ஆற்றுகை, காண்பியக் கலைகள் பீடாதிபதி முதுகலைமாணி தவநாதன் றொபேட், மிருதங்கம்- நடனத்துறை விரிவுரையாளர் முதுதத்துவமாணி க.கஜன், வயலின், வாத்தியத் துறை விரிவுரையாளரான நுண்கலைமாணி கே.வேலதீபன், புல்லாங்குழல்- வாத்தியத்துறை விரிவுரையாளர் நுண்கலைமாணி சி.யூட் ஆகியோருடன் ஒப்பனைக் கலைஞரான கிழக்குப் பல்கலைக்கழக நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சோபிதன் ஆகியோர் இசைந்திருந்தனர். திருவள்ளுவர் பண்பாட்டு அரங்கம் ரசிகர்களால் நிறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3344

நகுல்




வசந்த்




தசாப்தன்





அருணி




பிரதுஷா




கபிலா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையுடன்...

10 கிராம் போதைப்பொருள் கலந்த லேகியத்தை உடைமையில் வைத்திருந்த தென்பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,30)

## எலிக்காய்ச்...

தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த சிங்கராஜா சிவராஜசிங்கம் (வயது-66) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

மூன்று நாள் காய்ச்சல் காரணமாக குறித்த நபர் வியாழக்கிழமை (25) காலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மாலை உயிரிழந்தார்.

இம்மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.(ம-7,60)

## யாழ்.ஒருங்...

மாகச் செயற்படுவது ஒருநாளும் ஏற்புடையதல்ல எனத் தொல்லியல் திணைக்கள அதிகாரியை எச்சரித்தார் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கோட்டை முனியப்பர் கோவில் உட்பட யாழ்.கோட்டை சுற்றுப்புறத்துக்கு தொல்லியல் திணைக்களத்தினால் எல்லைக் கற்கள் இடப்பட்ட விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.இளங்குமரன் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலிக்கும் போதே அமைச்சர் தொல்லியல் திணைக்கள அதிகாரியை இவ்வாறு எச்சரித்திருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் தொல்லியல் திணைக்களத்தின் யாழ்ப்பாணம் கோட்டையின் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்,

கோட்டை முனியப்பர் கோவில் உட்பட கோட்டை சுற்றுப்புறப் பகுதிகளுக்கு எல்லைக்கற்கள் இட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைகளின் அனுமதியுடனேயே மேற்குறித்த செயற்றிட்டத்தை செய்திருந்தோம்.

1940ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்கள அடையாளப்படுத்தலுக்கமைவாகவே மேற்குறித்த எல்லைக்கற்கள் நாட்டப்படுகின்றன.

குறித்த செயற்றிட்டம் 2024ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டம் எனவும் ஆலயச் சூழலில் அத்துமீறிய வாகனப் பயன்பாடு மற்றும் சமூக சீர்கேடுகளைத் தடுக்கும் முகமாகவே எல்லைக் கற்களையிடும் பணி மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவித்தார்.

எனினும் குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், ஏன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூடத் தெரியப்படுத்தாமல் அவசர அவசரமாக இவ்வாறு செயற்பட்டீர்கள். வீதிக்கு மிக அருகில் இவ்வாறு எல்லையிட்டிருக்கிறீர்கள். விபத்து நடந்து யாருடைய உயிருக்கு ஏதும் நடந்தால் நீங்கள் அதற்குப் பொறுப்புக்கூறுவீர்களா? எனக் கேட்டபோது குறித்த அதிகாரி மௌனமாக இருந்ததை அவதானித்த ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான சந்திரசேகர் குறித்த அதிகாரியைக் கடுமையாகச் சாடி, பொதுமக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் பதில் சொல்லாமல் இவ்வாறு அமைதியாக இருப்பது அழகல்ல என்றார்.

அத்துடன் இடப்பட்ட எல்லைக்கற்களை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை நான் குறித்த அமைச்சுடன் கலந்துரையாடி மேற்கொள்கிறேன். அதுவரை எல்லைக்கற்களை நாட்ட வேண்டாம் எனக் கடுமையாகக் கூறியிருந்தார்.

தொல்லியல் திணைக்களத்தின் மேற்குறித்த செயல் இந்து மக்களின் மனங்களைக் காயப்படுத்தும் செயல் என்பதுடன் குறித்த கற்களை அகற்றி மக்கள் சுதந்திரமாகக் கோட்டை முனியப்பர் ஆலயத்தை வழிபட அனுமதிக்க வேண்டும் என பல்வேறு இந்து அமைப்புக்கள் கேரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-க)

## ஒற்றையாட்சியை...

அரசாங்கம், ஈழத்தமிழர்களுக்கு அர்த்தமுள்ள சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பை உறுதி செய்ய வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத் தமிழ் அரசியல் கட்சிகளின் சில தலைவர்கள், ஒற்றையாட்சி முறையை வலுப்படுத்தும் நோக்கில் அரசியலமைப்புத் திருத்தங்களைத் திட்டமிட்டு வருவதாகவும் அது சிங்களப் பெரும்பான்மைவாதத்தை மேலும் ஊக்குவிக்கும் என அன்புமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இரண்டுதேசிய இனங்கள் வசிக்கும் நாட்டில் இதுபோன்ற நடவடிக்கைகள் ஆபத்தானவை மற்றும் கண்டிக்கத்தக்கவை என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நினைவுகூர்ந்துள்ள அன்புமணி, இந்த ஒப்பந்தம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பதன் மூலம் தமிழர்களுக்கு சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பைக் கருத்தில் கொண்டது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், இலங்கை இதைத் தொடர்ந்து செயற்படுத்த மறுத்து வருவதாகவும் 13வது அரசியலமைப்பு திருத்தம், தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்குப் பதிலாக, அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் குறைத்து விட்டதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இல்லாத நிலையிலும், தமிழர் விடுதலைப் போராட்டத்தின் மூல காரணங்கள் நீடிப்பதாக அன்புமணி ராமதாஸ் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலங்கையில் சுயாட்சியை நிரந்தரமாக மறுக்கும் எந்தவொரு அரசியலமைப்பு மாற்றமும் ஈழத் தமிழர்களிடையே அடக்கப்பட்ட விடுதலை உணர்வுகளை மீண்டும் தூண்டிவிட்டு இலங்கையின் எதிர்காலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார். (ம-7)

## உடுவிலில்...

அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.12.26 — சீட்டிழுப்பு இலக்கம் 6055 — J 7 3 7 9 7 7

அத சம்பத — J 7 9 7 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0630 — National Lotteries Board

சுப தவசக — திகதி 2025.12.26 — சீட்டிழுப்பு இலக்கம் 171 — தனுசு 12 41 46 — 2287

தன நிதானய — திகதி - 2025.12.26 — சீட்டிழுப்பு இலக்கம் - 2085 — G 14 39 44 80 G

மெகா பவர் — திகதி 26/12/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2403 — B 02 06 25 58 67

ஜய — திகதி 2025.12.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0323 — L 3 0 7 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4297 — சீட்டிழுப்பு திகதி 26.12.2025 — H 03 08 50 71 — H

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.12.26 — சீட்டிழுப்பு இலக்கம் 1364 — மிதுனம் 06 35 57 61 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 26.12.2025 — வெற்றி வாரம் 0763 — P 2 5 5 2 6 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,369,032.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3029 — சீட்டிழுப்பு திகதி 2025.12.26 — தினம் வெள்ளிக்கிழமை — 12 17 35 44 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,464,928.80

சனிதா — திகதி 26.12.2025 — வெற்றி வாரம் 5190 — 16 21 52 73 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,044,294.00

சசிரி — வெற்றி வாரம் 859 — சீட்டிழுப்பு திகதி 26.12.2025 — வெள்ளிக்கிழமை — 05 11 41 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4741 — சீட்டிழுப்பு திகதி 26.12.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 12 34 41 57 சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,422,641.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — P 14 15 41 48 61 — 2205 — 26.12.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.615,759,560.00

அட கோடிபதி — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2855 — சீட்டிழுப்பு திகதி 2025.12.26 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,239,736.00 — 01 19 74 75 H


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு உண்டு

## யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் 15 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமையில்
- அல்லைப்பிட்டி செல்லும் பிரதான வீதி காப்பற் முகப்புடன்
- அல்லைப்பிட்டி தேவாலயம் 100m தூரம்
- அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் 300m தூரம்
- அரச தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் வீதி.
- வீடுகள் கட்டுவதற்கும், வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த காணி
- வீதி முகப்புடன் ஒரு பரப்பின் விலை 1,000,000/=, (பத்து லட்சம்)
- இரண்டாம் காணி ஒரு பரப்பின் விலை 900,000/=, (ஒன்பது லட்சம்)
- மூன்றாம் காணி ஒரு பரப்பின் விலை 800,000/=, (எட்டு லட்சம்)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்பு: 077 288 0152 / 076 860 2770 / 076 987 8617

(1852)

# யாழ் நகரில்...

தரம் குன்றாத கல்விச் சேவையில் 10 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும்

**தீபம்** உயர் கல்விக் கல்லூரி (கல்லூரி வீதி, கொக்குவில்)

தனது கிளையை கொக்குவில் மண்ணில் ஆரம்பிக்கின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கல்வி ஆண்டு - 2026

தரம் 06 முதல் O/L, A/L வரை

தமிழ்மொழி மூலம், English Medium

ஆரம்பம்: 29.12.2025
திங்கள் மதியம் 01.00 மணி (நாள்வகுப்பு)

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்"

077 224 7781

(C-4678)

# பூநகரியில் காணி விடுவிப்பு

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நல்லூர் கிராம சேவையாளர் பிரிவில், கடந்த 16 ஆண்டுகளாக இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டிருந்த 25 ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர்செய்கை மற்றும் மேட்டு நிலக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

மேற்படி காணிகளை உரிய மக்களிடம் விரைவாக கையளிப்பது தொடர்பாக துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார். (ம-7,316)

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கரவெட்டி நெல்லியடி சிக்னல் சந்தியிலிருந்துகொடிகாமம் பிரதான வீதியில் 500m தூரத்தில் 18 பரப்புக் காணி இரண்டு பரப்பாக பிரித்து தரப்படும். குடியிருப்புச் சூழல், நன்னீரூற்று வளங்கள் உண்டு. இந்தக் காணிகளை மொத்தமாகவும் இரண்டாகவும் பிரித்தும் தரப்படும்.

(6392)

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:
077 639 4409, 076 824 7563

# Voyzant இந்தியா கோவில்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர் |
| திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரப்பாணி |
| திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர் |

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்

189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்

10 நாட்கள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd

புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)

077 284 9535, 021 222 6866

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

(6308)

# காணி விற்பனைக்கு

யாழ். கொக்குவில் பொற்பதிப் பகுதியில் உள்வீதி அருகில் 1 பரப்பு 2 குளி காணி விற்பனைக்கு உள்ளது.

077 282 8175

(C-4676)

# பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலைகளைச் செய்து இரண்டு பிள்ளைகளைப் பராமரிக்க பணிப்பெண் தேவை.

வயது : 40 - 50

பணி நேரம் : காலை 7.00 – மாலை 5.00

077 459 7938
075 712 7528

(1847)

# பாராட்டி வாழ்த்தி வெற்றிக்காய் வாக்களிப்போம்



இசையில் தொடங்குதம்மா என்று ஆரம்பித்து கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா என்று தன் கணீர் குரலால் எம்மை மகிழ்விக்கும் இனிய குரலுக்கு சொந்தக்காரி செல்வி இ.தசிகா ஆவார். இவர் துன்னாலை மண்ணை சொந்தமாகக் கொண்ட சங்கீத ஆசிரியை பரீதாவின் புதல்வி. இவர் பல மேடைகளில் தன் இசைத் திறமைகளை வெளிக்காட்டி பல வெற்றிகளைத் தமதாக்கியவர். தற்போது பிரம்மாண்டமான இசை மேடையான Shakthi crown மேடையில் இன்று நடை பெறும் இறுதிச்சுற்றுப்போட்டியில் வெற்றி பெற காத்திருக்கிறார். அவரின் வெற்றி ரசிகர்களான உங்களின் கைகளிலும் தங்கியிருக்கிறது. அவரின் வெற்றி எம் மண்ணிற்கு பெருமை சேர்க்கும் என்பது உறுதி. எல்லோரும் ஒன்றிணைந்து வாக்களித்து அவரை மகுடம் சூடச் செய்வோம்.

திகதி : 27.12.2025 சனிக்கிழமை (இன்று)

நேரம் : மாலை 6.00 மணி

(மாலை 6:45 மணியளவிலிருந்து வாக்குகளை அளிக்க ஆரம்பிக்கலாம்)

**வாக்களிக்கும் முறை**

SC (space) 10 என Type செய்து 7788 என்ற இலக்கத்திற்கு SMS இனூடாக தொடர்ச்சியாக வாக்களிக்க முடியும்
(Reload செய்வதனூடு மட்டும்)

மற்றும் TV திரையில் காண்பிக்கப்படும் QR code, id Scan செய்வதனூடாகவும் வாக்களிக்கலாம்

Shakthi Crown Facebook, Youtube மற்றும் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பாகும்

Karavai Care Centre,
Karaveddy.

(1839)

# Group Classes for English & English Literature

ஆங்கிலம் மற்றும் ஆங்கில இலக்கியம்

A+Pass — புதிய அனுபவங்கள் தரப்போகுது

தரம் 6 தொடக்கம் 11 வரை

**English and English Literature (Gr.6-11)**

**Paper Classes for Grade 11**

**Diploma in Spoken English for Adults**

(waiting for the A/L Results students)

**Recognized Certificate (Online and Physical session)**

Team of Qualified English Lecturers

**TP : 0777 880 330**

For Registration use this QR code

Nelliady : Closed by Rubins Hospital
Jaffna : Closed by Kerniady Vairavar Kovil, Adiyapatham Road, Thirunelvely.

(1850)

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | Max 2Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= | Max 5 Kg |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 230/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 199/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 250/= | Max 5 Kg |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 03 |
| 1Kg கடலை | - 349/= | |
| 1Kg செத்தல் NO 1 | - 850/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 210/= | |
| 1Kg குத்தரிசி | - 255/= | |

MAX 01 ~~1200~~ 1139 — 400g Anchor



~~320~~ 280 — 1Kg சன்லைட் பவுடர்



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

(1853)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.